**போரதீவுப்பற்று பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போரதீவுப்பற்று பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான போரதீவுப்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கான முத்திரைத் தீர்வை நிலுவைத் தொகையான ரூபா 11,233,307 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டுள்ள போதிலும், இத்தொகை மீளவும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் நிலுவையாகக் காட்டப்பட்டுள்ளது. | தவறுதலாக காட்டப்பட்டுள்ள நிலுவையை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான களஞ்சிய இருப்புத் தொகை ரூபா 1,733,098 நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | இது எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நீர் வழங்கியதன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 521,438 தொகையானது நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்படி. | மேற்படி. |
| (ஈ) | மீளாய்வாண்டில் ரூபா 220,411 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் காகிதாகிகள் என்பன நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்படி. | மேற்படி. |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 48,538,599 பெறுமதியான 05 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துப் பூர்வ ஆதாரம் பெறப்பட்ட சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட போதிலும் அதன் உண்மையான பெறுமதியை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் I இன் பிரிவு 5 (XII) | பணம், களஞ்சியப்பொருட்கள், அரசிறை அறவீடு மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை உத்தியோகத்தர்களுக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | ஊழியர்களிடமிருந்து பிணைப்பணம் அறவிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,840,744 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 35,954,444 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,200,000 | -- | -- | -- | 1,000,000 | -- | -- | -- |
| வாடகைகள் | 1,930,000 | 888,000 | 764,850 | 436,152 | 1,430,000 | 1,027,410 | 1,088,150 | 313,002 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,905,000 | 1,080,625 | 1,080,625 | -- | 1,925,000 | 884,515 | 884,515 | -- |
| ஏனைய வருமானம் | 19,865,000 | 45,333,421 | 42,381,478 | 2,969,842 | 74,570,000 | 52,473,938 | 52,473,928 | 17,899 |
| | 24,900,000 | 47,302,046 | 44,226,953 | 3,405,994 | 78,925,000 | 54,385,863 | 54,446,593 | 330,901 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| | | | ------------------ |
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | 2013 ஆகஸ்ட் 31ஆந் திகதிய 1826ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 12 கிராம சேவையாளர் பிரிவுகள் அபிவிருத்தி அடைந்த கிராமங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பிரதேசங்களிலுள்ள ஆதனங்களை மதிப்பிட்டு வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரிகளினை அறவிடு செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாக தற்போது தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றது. | வீதவரி அறவீடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான குத்தகை வருமான நிலுவைத் தொகையான ரூபா 281,591 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலங்களில் நிலுவைகளை அறவிடுவதற்கும், அதனை செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டில் 66 வியாபார நிலையங்களிலிருந்து பெறவேண்டிய வியாபார உத்தரவுப்பத்திரக் கட்டணத் தொகையான ரூபா 123,900 வருமானத்தினை சபை இழந்துள்ளது. | எதிர்காலத்தில் தவறாது அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்கான வியாபார உத்தரவுக் கட்டணங்களை தவறாது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **முத்திரைத் தீர்வைகள்** | | |
| | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 2,602,426 ஆகும். | பதில் இல்லை | முத்திரைக் கட்டண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான மூன்று தொலைபேசி இணைப்புகள் பயன்படுத்தப்படாத போதிலும், மீளாய்வாண்டில் வாடகையாக ரூபா 87,060 செலுத்தப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான பயனபடுத்தப்படாது காணப்படுகின்ற தொலைபேசி இணைப்புக்களை துண்டிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பயன்பாடற்ற சேவைக்கான மேலதிகச் செலவுகளை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1992 செப்தெம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியீடு செய்யப்பட்ட பொதுச் சுற்றறிக்கை இல.1769 இன் பிரகாரம், பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கட்டடத்தின் கீழ் தளத்திற்கு மட்டுமே படம் வரைய முடியும். எனினும், மீளாய்வாண்டில் 02 மாடி கொண்ட 05 கட்டடங்களுக்கான வரைபடமானது, பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வரையப்பட்டு இச்சுற்றறிக்கைக்கு முரணான வகையில் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பொதுசுகாதாரப் பரிசோதகர்களால் இரண்டு மாடி கொண்ட கட்டடங்கள் வரையப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதனை நிறைவேற்று பொறியியலாளரின் கையொப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 04 அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக தொடர்பாக மீளாய்வாண்ல் சபையினால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுமதி பெறப்படாத கட்டடங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அனுமதியின்றி கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களத்திடமிருந்து பால் சேகரிக்கும் வாகனத்தை பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக நீர்த்தாங்கியானது 2021 யூலை 16 இல் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த நீர்த்தாங்கியின் பெறுமதி கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டு மற்றும் கிடைக்கப்பெற்ற பால் சேகரிக்கும் வாகனத்தின் பெறுமதியை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாற்றீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளை எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சீர்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வாகனத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பழுதடைந்து காணப்படுகின்ற 06 வாகனங்களை திருத்துவதற்கும் மற்றும் பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 04 வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போதிய நிதி வசதி கிடைத்ததும் திருத்தமானது மேற்கொள்ளப்படும். மேலும், இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட்டு அகற்றுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளப்படவுள்ளது. | வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,082,500 பெறுமதியான Multishopper மற்றும் Rotatable strainer ஆகிய இயந்திரங்கள் கடந்த 02 ஆண்டுகளாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | யானை வேலிகள் அமைக்கப்பட்ட பின்னர் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறி இல. 4.2.1(அ)இன் பிரகாரம், கொள்வனவுக்கான பெறுகைத்திட்டமானது சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் கொள்வனவிற்கான பெறுகைத்திட்டமானது தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்கல் மற்றும் கொள்வனவிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 12 பதவிகளுக்கு 28 வெற்றிடங்களும், 04 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக உயர்மட்ட நிர்வாகத்தினருக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| சபையினால் 06 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பில் உரியவர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 503,195 தொகையினை 12 வருட காலமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விபரங்களற்ற இப்பணியாளர்கள் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 01ஆந் திகதியிடப்பட்ட 1534/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) இல்லாதொழியும் நாளிலிருந்து 03 மாத காலத்திற்கு முன்னர் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்க வேண்டும். எனினும், 44 எண்ணிக்கையான நிறுவனங்கள் உரிமம் காலாவதியாகியும் உரிமத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. | அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்துக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடப்படுமெனவும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |